**செய்தி வெளியீடு எண் : 1127** **நாள் : 08.06.2023**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் இன்று (08.06.2023) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு இராம்கோ நிறுவனம் சார்பில் ரூபாய் 4 கோடி மற்றும் பொன் கெமிக்கல்ஸ் நிறுவனம் சார்பில் ரூபாய் 25 இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது.**

தமிழ்நாட்டில் விளையாட்டுக்கான கட்டமைப்பை மேம்படுத்தி சர்வதேச அளவிலான விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை உருவாக்கும் வகையிலும், தேவையான உதவிகளை வழங்கிடும் வகையிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் **"தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"** (Tamil Nadu Champions Foundation) உருவாக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் அரசு ஆணை எண்.29 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை நாள் 05.05.2023 –ன் படி மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களை துணைத்தலைவராகவும் கொண்ட ஏழு பேர் அடங்கிய நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பல்வேறு அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் சார்பில் இந்த அறக்கட்டளைக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் இன்று (08.06.2023) சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள முகாம் அலுவலகத்தில் "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு இராம்கோ நிறுவனம் சார்பில் பங்களிப்பாக ரூபாய் 4 கோடிக்கான காசோலை வழங்கப்பட்டது.

மேலும் பொன் கெமிக்கல்ஸ் நிறுவனம் (Pon Pure Chemicals Group) சார்பில் ரூபாய் 25 இலட்சத்திற்கான காசோலை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ.மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., இராம்கோ மற்றும் பொன் கெமிக்கல்ஸ் நிறுவனங்களின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in